பக்கங்கள் 19 + 04

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மாசி 24 வியாழக்கிழமை 07.03.2024 அதிர்வு 220

## இருவரைத் தாக்கிய எஸ்.ஐ. பணி நீக்கம்!

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் – உடப்பு பகுதியில் நபர்கள் இருவர் மீது தாக்குதல் நடத்தியமை தொடர்பில் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் பணி இடைநீக்கம் 04

# சாணக்கியன் மீது தாக்குதல் முயற்சி

## ரோஹித மீது குற்றச்சாட்டு






ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தன்னை அச்சுறுத்தி தாக்குதல் நடத்த முயற்சித்தார் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் இன்று சபையில் சுட்டிக்காட்டினார். 04

# காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் முல்லைத்தீவில் நாளை பெரும் போராட்டம்

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் முல்லைத்தீவில் பெரும் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை நாளை மேற்கொள்ளவுள்ளனர் என்று முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத் தலைர் ம.ஈஸ்வரி தெரிவித்தார்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், தங்கள் உறவுகளை வெளிப்படுத்தவும், விடுவிக்கவும் வலியுறுத்தி மேற்கொண்டு வரும் தொடர் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு 7 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு இந்தக் கவனவீர்ப்புப் 04







# வேகக் கட்டுப்பாட்டை இழந்த லொறி கடைக் கட்டடத்துடன் மோதி விபத்து

## நல்லூர் ஆலயம் முன்பாக சம்பவம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் – நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு முன்பாக வேகக் கட்டுப்பாட்டை இழந்த லொறி கடைக் கட்டடத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

பருத்தித்துறை வீதியூடாக யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த லொறி இன்று காலை நல்லூர் ஆலயத்துக்கு முன்பாக உள்ள வளைவில் திரும்பும் போது அங்கிருந்த கடைக் கட்டத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதில் லொறியின் முன்பக்கம் கடுமையாகச் சேதமடைந்தத்துடன் கடையும் சேதமடைந்துள்ளது.

லொறியின் சாரதி காயங்களுக்கு உள்ளாகியுள்ள நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, அருகில் இருந்த ஓட்டோ தரிப்பிடத்தில் இருந்த ஓட்டோ ஒன்றும் சேதத்துக்குள்ளானது.

சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.














# கற்பிட்டி ஓ.ஐ.சிக்கு விளக்கமறியல்

(ரஸீன் ரஸ்மின்)

கற்பிட்டி பொலிஸ் நிலைய முன்னாள் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய பொலிஸ் பரிசோதகர் நிசாந்த குமாரவை எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு புத்தளம் மாவட்ட மேலதிக நீதிவான் அயோனா விமலரத்ன உத்தரவிட்டுள்ளார்.

கற்பிட்டி பொலிஸ் நிலையத்தில் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய போது, பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரைப் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்திய சம்பவம் தொடர்பில் புத்தளம் நீதிமன்றில் முன்னிலையாகி பிணையில் இருந்த முன்னாள் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நேற்று மீண்டும் புத்தளம் நீதிமன்றில் முன்னிலையானார்.

இதன்போது , சம்பவம் தொடர்பில் விசேட விசாரணைகளை மேற்கொண்ட குளியாப்பிட்டிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மஹேஷ் குமாரசிங்க, சம்பவம் தொடர்பில் முன்னெடுத்த விசாரணைகளின் உண்மைத் தன்மைகளை புத்தளம் நீதிமன்றில் அறிக்கை செய்தார்.

இதன்போது, இரு தரப்பு விவாதங்களையும் கருத்தில்கொண்ட நீதிவான், பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் முறைப்பாட்டாளரை அச்சுறுத்தியமையை தொடர்பில் அவதானம் செலுத்தியதுடன் சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.




# இனங்களுக்கு இடையில் நல்லுறவை கட்டியெழுப்பும் மாநாடு மாளிகைக்காட்டில்

**(எம்.ஏ.றமீஸ், பாறுக் ஷிஹான்)**

இனங்களுக்கிடையில் சமாதானத்தையும் நல்லுறவையும் கட்டியெழுப்பும் வகையில் கிழக்கு மாகாணத்தில் உள்ள துறைசார்ந்தவர்களை ஒன்றிணைத்து அவர்களின் கருத்துக்களைக் கேட்டறியும் வகையில் கெப்சோ அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட விஷேட சமாதான மாநாடு மாளிகைக்காடு பிரதேசத்தில் நேற்று முன்தினம் (05) இடம்பெற்றது.

கெப்சோ நிறுவனத்தின் திட்டப்பணிப்பாளர் ஏ.ஜே.காமில் இம்டாட் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சுவிற்சர்லாந்து, ஜப்பான் மற்றும் தென் ஆபிரிக்க நாட்டின் தூதர்கள் அதிதிகளாகவும், அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் வீ.ஜெகதீசன், பிரதேச செயலாளர் எஸ்.எல். எம். ஹனீபா உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் சிறப்பு அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

சமூக மட்டத்தில் நல்லுறவைக் கட்டியெழுப்புதல் எனும் தொனிப்பொருளின் கீழ் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்டு வந்த பிரதேச மற்றும் மாவட்ட மட்டங்களிலான நிகழ்வுகளை அடுத்து, மாகாண மட்டத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வின்போது இன நல்லுறவை ஏற்படுத்துவதில் சமூக மட்டத்தில் காணப்படும் சவால்களை கண்டறிந்து அதற்கான முன்மொழிவுகள் துறைசார் சமூக ஆர்வலர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டன.




இதன் போது முக்கிய ஆறு விடயப் பரப்புகளில் 17 வகையான முன்மொழிவுகள் துறை சார்ந்தவர்களால் முன்வைக்கப்பட்டன. இது தவிர, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எம்.எம். நௌஷாட் மாநாட்டின் பிரதான உரையை நிகழ்த்தினார். தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் கலாநிதி அஸ்லம் சஜா மற்றும் எம்.வை. மின்னதுல் சுஹீரா ஆகியோர் சிறப்புரை நிகழ்த் தினர்.

இதன் போது சமூகங்களுக்கிடையில் சமாதானத்தைக் கட்டியெழுப்பச் செயற்பட்டவர்கள் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். அதிதிகள் நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இதன்போது மதத் தலைவர்கள், சமூகத் தலைவர்கள், ஆய்வாளர்கள், ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள், சிவில் சமூக முக்கியஸ்தர்கள், பொது நல அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.












# நாளை நகுலேஸ்வரம் தேர்

ஈழத்தின் பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றான வரலாற்றுச் சிறப்பு மிக்க கீரிமலை நகுலேஸ்வரம் நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வர சுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் தேர்த் திருவிழா மகா சிவராத்திரி நாளான நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

அதிகாலை 4.30 மணியளவில் அபிஷேகத்துடன் பூசைகள் ஆரம்பமாகி காலை 7.30 மணியளவில் தம்ப பூசை, காலை 8 மணியளவில் வசந்தமண்டபப் பூசை என்பன இடம்பெற்று முற்பகல் 10 மணியளவில் சித்திரத் தேரில் நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆரோகணித்து சித்திரத் தேர் வீதி உலா இடம்பெறும்.

பிற்பகல் 2.30 மணியளவில் சித்திரத் தேரிலிருந்து நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் அவரோகணித்து தொடர்ந்து பிராயச்சித்த அபிஷேகமும் நடைபெறும் என்று ஆலய நித்தியகுரு சிவஸ்ரீ ந.இரங்கநாத சர்மா தெரிவித்தார்.

# திருக்கேதீஸ்வரத்தில் நாளை மகா சிவராத்திரி

மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் மகா சிவராத்திரிப் பெரு விழா நாளை வெள்ளிக்கிழமை அதிகாலை 5 மணி முதல் மறுநாள் சனிக்கிழமை காலை வரை நடைபெற வுள்ளது.

நான்கு சாமப் பூசைகளும் இடம் பெற்று, சனிக்கிழமை அதிகாலை 5.30 மணியளவில் வசந்த மண்டப அலங்காரப் பூசையைத் தொடர்ந்து திருக்கேதீஸ்வரரப் பெருமான் புனித பாலாவித் தீர்த்தக் கரைக்கு எழுந்தருளி அதைத் தொடர்ந்து தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

மகா சிவராத்திரியை முன்னிட்டு நாளை காலை 9 மணி முதல் நாளை மறுதினம் காலை வரை பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப் பட் டுள்ளன என்று திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிச் சபையினர் தெரி வித்தனர்.

அதேவேளை, மகா சிவராத்திரி விரத காலப்பகுதியை முன்னிட்டு வரலாற்றுச் சிறப்பு மிக்க மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலயத்தின் பிரதான நுழைவாயிலில் நேற்றுப் புதன்கிழமை தற்காலிக அலங்கார வளைவு அமைக் கப்பட்டது. சைவசமயத்தின் அடை யாளமான நந்திக் கொடிகளும் பறக்க விடப்பட்டன.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**இருவரைத்...**

செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித் துள்ளது.

புத்தளம் – உடப்பு பொலிஸ் நிலையத் தில் கடமையாற்றி வரும் உப பொலிஸ் பரிசோதகரே இவ்வாறு பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி உப பொலிஸ் பரிசோதகர் தனது நண்பர்கள் சிலருடன் சேர்ந்து இருவர் மீது தாக்குதல் நடத்திய குற்றச் சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டிருந்த நிலையிலேயே, பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப் டுகின்றது.

**காணாமல்...**

போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

"நாளை 8ஆம் திகதி சர்வதேச மகளிர் தினம் முன்னெடுக்கப்படுகின்றது. தற் போது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அமர்வு நடைபெற்று வருகின்றது. இலங்கையில் பெண்களா கிய நாம் இன்னமும் எமது உறவுகளைத் தேடிக்கொண்டிருக்கின்றோம் என்பதை வெளிப்படுத்தும் வகையில் இந்தப் போராட்டம் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக நடத்தப்படவுள் ளது. அதேநேரம் கொக்குத்தொடுவாயில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழி தொடர்பாகவும் விரைவான தீர்வு வேண்டும்" – என்றும் ம.ஈஸ்வரி மேலும் கூறினார்.

**சாணக்கியன்...**

நாடாளுமன்றத்தில் பிரதமர் அலு வலகப் பகுதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது எனவும், இதனால் தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்றும் சாணக்கியன் எம்.பி. தெரிவித்தார்.

"பிரதமர் அலுவலகம் செல்லும் வழியில் நீர் எவ்வாறு எமது நாட்டின் பிரதமரைச் சந்திக்கலாம் என்று கூறி தாக்க முற்பட்டார். பிரதமர் என்பவர் சிங்களவருக்குரியவரா? அவர் நாட்டின் பிரதமர் இல்லையா? இவ்வாறான இனவாதிகள் நாட்டில் இருக்கும் வரை எவ்வாறு எமது மக்களுக்கான நீதி கிடைக்கும்? எனது முறைப்பாடு தொடர்பில் நாடாளுமன்றச் சிறப்புரிமை குழு விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். எனக்கும் சண்டித்தனம் தெரி யும். ஆனால், நாடாளுமன்ற உறுப்பினர் களுக்கென ஒழுக்கம் உள்ளது. அது பாதுகாக்கப்பட வேண்டும்." – என்று சாணக்கியன் எம்.பி. மேலும் குறிப்பிட்டார்.



# வறுமை ஒழிப்புத் திட்டத்தில் ரூ.30 மில்லியன் நிதி உதவி

(சர்ஜுன் லாபீர்)

இஸ்லாமிக் ரிலீப் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் அனுசரணையில் சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வசிக்கும் தெரிவு செய்யப்பட்ட சுமார் 57 குடும்பங்களில் பாடசாலை செல்லும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கு உதவி வழங்கப்பட்டுள்த.

ஐ லைவ் நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக சுமார் 30 மில்லியன் ரூபா நிதி அபிவிருத்தி ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் எம்.ஏ அஸ்ரப் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் வைத்து வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாகச் சம்மாந்துறை பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம் கலந்து கொண்டு காசோலைகளை வழங்கி வைத்தார்.

நிர்வாகக் கிராம உத்தியோகத்தர் எம்.எல்.எம் தாஸீம், இஸ்லாமிக் றிலீப் நிறுவனத்தின் சிரேஷ்ட திட்ட உத்தியோகத்தர் எம்.சிராஜ், திட்ட உதவியாளர் எம்.ஆஸாத் உட்பட பலரும் கலந்து கொண்டனர். ஏற்கனவே முதலாம் கட்டத்தில் 124 பயனாளிகளுக்கு நிதி உதவி வழங்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# மேல் மாகாண ஆயுள்வேத ஆணையாளர் சிலாபம் சிதாரா மூலிகைப் பண்ணைக்கு!

புத்தளம் – சிலாபம் நகரில் உள்ள சிதாரா மூலிகைப் பண்ணையை மேற்பார்வை செய்யும் நோக்கில், வடமேல் மாகாண ஆயுள்வேத ஆணையாளர் வைத்தியர் எம.பி.எஸ்.கே.ஆர்.முத்துகல தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் (05) விஜயம் செய்தனர்.

வடமேல் மாகாண ஆயுள்வேத ஆணையாளராகப் புதிதாகக் கடமையைப் பொறுப் பேற்றுக் கொண்ட, வைத்தியர் எம்.பி.எஸ்.கே.ஆர். முத்துகல முதன் முறையாக அங்கு சென்றுள்ளார்.

இந்த விஜயத்தில் வடமேல் மாகாண ஆயுள்வேத பிரதி ஆணையாளர் வைத்தியர் கே. சிவாதரன், வடமேல் மாகாண சமூக வைத்திய உத்தியோகத்தர்களின் மேற்பார்வை அதிகாரி வைத்தியர் நர்மதா திசாநாயக்க, சிலாபம் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் சானிகா பிரியதர்சினி உட்பட சிலாபம் பிரதேச செயலகத்துக்கு உட்பபட்ட சமூக வைத்திய உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட குழுவினர்கள் இதில் கலந்துகொண்டனர்.



இதன்போது, மூன்று தசாப்தங்களை கொண்ட சிலாபம் சிதாரா மூலிகை பண்ணையில் காணப்படும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மூலிகைகள் தொடர்பில் சிதாரா ஆயள்வேத வைத்திசாலையின் நிறுவுனர் வைத்தியசூரி, வைத்தியர் பி.எம்.எம்.சாலின் ஆகியோரால் தெளிவுபடுத்தப்பட்டது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# மாலைதீவில் சீனா ஆதிக்கம்

இந்தியப் பெருங்கடலின் தீவுக் கூட்ட நாடான மாலைதீவில் கடந்த ஆண்டு இறுதியில் நடைபெற்ற அதிபர் தேர்தலில் முஹம்மது மொய்ஸ் தேர்ந்தெடுக்கப்பட்டமையைத் தொடர்ந்து அங்கு ஏற்பட்ட கடும் சீனச் சார்பு மாற்றம் கடல் வழி அயல் தேசமான இந்தியாவுக்குக் கேந்திர முக்கியத்துவம்மிக்க நெருக்கடியாக மாறி வருகின்றது என்பது கண் கூடு.

மாலைதீவு மண்ணில் இருந்து இந்தியத் துருப்புக்களை அகற்றி, இழந்த தேசிய இறையாண்மையை மீண்டும் உறுதிப்படுத்துவோம் எனத் தன் நாட்டு மக்களுக்கு வாக்குறுதி அளித்து, அதன் அடிப்படையில் 'இந்தியா அவுட்!' என்ற பிரச்சாரத்தை முன்னிலைப்படுத்தி, அதிபர் தேர்தலில் களப்பிரசாரங்களைச் செய்த முஹம்மது மொய்ஸ், அந்தத் தேர்தலில் வெற்றி பெற்று, கடந்த நவம்பரில் பதவியேற்றமை முதல் இந்தியாவுக்கு அரசியல், பாதுகாப்பு விடயங்களில் குடைச்சல் தரும் அயல் தேசமாக மாலைதீவு மாறிவிட்டது.

இப்போது சீனாவிடம் இருந்து நேரடியாக இராணுவ உதவிகள இனாமாக - வெகுமதியாக - பெறுவதாக மாலே அரசு நேற்று முன்தினம் அறிவித்திருப்பது இந்தப் பிராந்திய அரசியலில் ஒரு புதிய திருப்புமுனையாகக் கருதப்படுகின்றது.

மாலைதீவு பாதுகாப்பு அமைச்சகம் கடந்த திங்களன்று பெய்ஜிங்குடன் சீனாவின் இராணுவ உதவிகளைப் பெறும் ஓர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதாகவும், இது வலுவான இருதரப்பு உறவுகளை வளர்க்கும் என்றும் மாலேயில் அறிவித்திருக்கின்றது.

மாலைதீவின் முன்னைய அரசுகளுடன் இந்தியா செய்து கொண்ட ஒப்பந்தங்களின்படி அங்கு தற்சமயம் 77 இந்தியப் படையினரும் அந்த அணியையொட்டி 12 மருத்துவ நிபுணர்களும் உள்ளனர். தவிரவும் அவசர மருத்துவ உதவிப் பணிகளில் இரண்டு ஹெலிக்கொப்டர்களும் ஒரு டோனியர் விமானமும் இந்திய உதவியுடன் இயங்குகின்றன.

மாலைதீவின் புதிய அதிபர் முஹம்மது மொய்ஸ் தமது நாட்டில் இருக்கும் இந்தியப் படையினரை மூடைகளை கட்டிக்கொண்டு நாட்டை விட்டுப் புறப்படுமாறு அறிவித்துவிட்டார். வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் இந்தியப் படைகள் வெளியேற வேண்டும் என அவர் காலக்கெடு விதித்தார். ஆயினும், வரும் ஞாயிற்றுக்கிழமை பத்தாம் திகதிக்கு முன்னர் இந்தியத் துருப்புகளில் முதல் அணி புறப்படவும், எஞ்சியோர் மே 10ஆம் திகதிக்கு முன்னர் - அடுத்த இரண்டு மாத காலத்துக்குள் - முற்றாக வெளியேறவும் இணக்கம் காணப்பட்டிருப்பதாக இப்போது கூறப்படுகிறது.

மாலைதீவில் ஏற்பட்ட அதிகார மாற்றம் அதன் அயலுறவுக் கொள்கைகளிலும் தலைகீழ் மாற்றங்களை ஏற்படுத்தியிருப்பது வெளிப்படையானது.

இந்தியாவுடனான ராஜதந்திர நெருக்கத்தை அடியோடு துண்டித்துக் கொண்டு, சீன வலையில் சரணடைய அந்த நாட்டின் புதிய தலைமை முடிவு செய்துவிட்டது என்பது துலாம்பரமானது.

கிட்டத்தட்ட 1,200 தாழ்வான பவளத் தீவுகளின் கூட்டமான மாலைதீவு ஆக 5 இலட்சத்திற்கும் குறைவான மக்கள் தொகையையே கொண்டது. ஆனால் இந்தியப் பெருங்கடலில் மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த கப்பல் பாதையில் அது அமைந்திருப்பதால் அது மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றது.

அதன் சார்பு நிலை இந்தியாவின் தரப்பிலிருந்து நழுவி சீன பக்கம் தழுவுவதும் வெளிப்படையானது. இந்திய உபகண்டத்தின் கேந்திர முக்கியத்துவ விடயங்களில் ஆழமான தாக்கத்தை - பின்னடைவை - இந்தப் போக்கு ஏற்படுத்த வல்லது.

இந்தியாவும் அதன் அயல் தேசமான சீனாவும் பொருளாதார சர்ச்சையில் இருந்து பாதுகாப்புக் கெடுபிடிகள் வரை பல தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளில் முட்டி, மோதி, இடறுப்பட்டு நிற்கையில், அவற்றின் புவிசார் அரசியல் மோதலின் ஒரு மையப் புள்ளியாக நீண்ட காலமாகவே மாலைதீவு இருந்து வருகின்றது.

மாலைதீவில் சீனா தனது கால் தடத்தை ஆளப் பதித்து வருவது இப்போது அப்பட்டமான - வெளிப்படையான - நடவடிக்கைதான்.

மாலைதீவில் சீன இருப்பு இந்தியாவின் மேற்கு மற்றும் தெற்கு பிராந்தியப் பாதுகாப்பில் உயர் கவலைக்குரியது என்பதையும் மறுக்க முடியாது.

மாலைதீவில் தனது தடத்தை சீனா ஸ்திரப்படுத்துவது இந்தியாவின் பாதுகாப்புத் திட்டமிடலுக்கு அச்சுறுத்தலான விடயம் என்பதும் புரியத்தக்கதே.



# முல்லைத்தீவில் பல்வேறு உதவிகள் செய்துள்ள சந்நிதியான் ஆச்சிரமம்!

யாழ்ப்பாணம், வடமராட்சி, தொண்டைமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் தண்டுவான் மகாவித்தியாலயத்துக்கு, அதிபரின் கோரிக்கைக்கு அமைவாக கல்விப் பொதுத் தராதர சாதாரண தரத்தில் கல்வி கற்கும் 29 மாணவர்களுக்கு 2 மாதங்களுக்கு உரிய மதிய உணவு வழங்குவதற்காக உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை சிவராத்திரி தின நிகழ்வை முன்னிட்டு நெடுங்கேணி வெடுக்குநாறி சிவாலயத்துக்கு அன்னதானப் பணிகளுக்காக உணவுப் பொருள்களும் வழங்கப்பட்டன.



அத்துடன் ஐயனார் முள்ளியவளை குடியிருப்பு, முதலாம் வட்டாரத்தை சேர்ந்த முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்தில் தரம் - 06 இல் கல்வி கற்கும் மாணவி ஒருவருக்கும், வற்றாப்பளை மகாவித்தியாலயத்தில் சாதாரண தரத்தில் கல்வி கற்கும் மாணவன் ஒருவருக்கும், பொன்னகர் ஸ்ரீ முத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலையில் கல்வி கற்பிக்கும் கிளிநொச்சி, பொன்னகர் மத்தி பிரதேசத்தை சேர்ந்த 02 அறநெறி ஆசிரியர்களுக்கும், பொன்னகர் ஸ்ரீ முத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலையில் கல்வி கற்பிக்கும் முல்லைத்தீவு, முறுகண்டி பபிரதேசத்தை சேர்ந்த அறநெறி ஆசிரியர் ஒருவருக்கும் , சுவாமி விவேகானந்தா அறநெறிப் பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆனைவிழுந்தான் பிரதேசத்தை சேர்ந்த அறநெறி ஆசிரியர் ஒருவருக்குமாக 06 பேருக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

இந்த உதவிகளைச் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று வழங்கினார்.





# கொழும்பில் மிகப் பிரம்மாண்டமாக நடைபெற்றுள்ள கீதைப் பெருவிழா!


இந்தியத் தூதரகத்தின் ஏற்பாட்டில் நான்கு நாள் அமர்வுகளாகக் கீதைப் பெருவிழா கொழும்பில் மிகப் பிரமாண்டமாகக் கொண்டாடப்பட்டுள்ளது.

மார்ச் 01 ஆம் திகதி முதல் மார்ச் 04ஆம் திகதி வரை கொழும்பில் இது நடைபெற்றது.

இலங்கை சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தனவுக்குப் புனித பகவத் கீதை நூலின் பிரதி ஒன்று கையளிக்கப்பட்டு நிகழ்வு நிறைவடைந்துள்ளது.

இந்தியாவின் ஹரியானா மாநிலத்தின் குருஷேத்ரா மேம்பாட்டு வாரியம், இலங்கையின் புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, மற்றும் கொழும்பிலுள்ள இந்திய தூதரகத்தின் கலாசாரப் பிரிவான சுவாமி விவேகானந்தா கலாசார நிலையம் ஆகியவை இணைந்து இலங்கையில் உள்ள 30 இற்கும் அதிகமான மத மற்றும் சமூக நிறுவனங்களின் ஒன்றிணைவுடன் இலங்கையில் முதல் தடவையாக 5 ஆவது சர்வதேச கீதைப் பெருவிழா இடம்பெற்றுள்ளது.

இவ்விழாவின் அங்கமாக 2024 மார்ச் 03 அன்று இராமகிருஷ்ணா மிஷன், மயூராபதி ஸ்ரீ பத்ரகாளி கோயில் ஆகியவற்றின் தொண்டர்கள்



உட்பட கிட்டத்தட்ட ஆயிரம் கலைஞர்கள் பல்வேறு ஆற்றுகைகளை நிகழ்த்தியவாறு தாமரைத் தடாகத்திலிருந்து கொழும்பு விகாரமகாதேவி பூங்கா வரை சென்ற ஒற்றுமைக்கான யாத்திரை உட்பட பல்வேறு கலை நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன.

இலங்கையின் பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் அமைச்சர்களான பந்துல குணவர்தன மற்றும் கௌரவ. விதுர விக்கிரமநாயக்க, இந்தியத் தூதர் சந்தோஷ் ஜா மற்றும் இந்தியாவிலிருந்து வருகைதந்த பேராளர்கள் இந்த யாத்திரையை பார்வையிட்டனர்.

“சமாதானம், சகோதரத்துவம் மற்றும் ஒற்றுமை ஆகியவற்றின் உருவகமாக கீதை” என்ற தொனிப்பொருளில் பல்வேறு நிபுணர்களால் நடத்தப்பட்ட செயலமர்வுகளுடன் கீதை தொடர்பான சர்வதேச கலந்துரையாடல் இரண்டாம் நாள் நடைபெற்றது.

சர்வதேச கருத்தரங்கில் புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கா, தூதர் சந்தோஷ் ஜா, சுவாமி குருசரநந்தா ஜி மஹராஜ், கீதா மணிசி சுவாமி கயாநந்தா ஜி மஹராஜ், குருஷேத்ரா மேம்பாட்டு வாரிய செயலாளர் ஸ்ரீ விகாஸ் குப்தா மற்றும் பேராசிரியர் அசங்க திலகரட்னே ஆகியோர் உள்வாங்கப்பட்டிருந்தனர்.

கீதையின் மகிமையின் உலகளாவிய செய்தி இவ்விவாதங்களில் பொதுவான கருப்பொருளாக இருந்தது.

இலங்கையில் நடைபெற்ற சர்வதேச கீதை பெருவிழாவே சர்வதேச ரீதியாக நடைபெற்ற பாரிய சர்வதேச கீதை பெருவிழாவாகும். முன்னர் நடைபெற்ற 4 பதிப்புக்களும் ஆஸ்திரேலியா (2023), கனடா (2022) ஐக்கிய இராச்சியம் (2019) மற்றும் மொரீசியஸ் (2019) ஆகிய நாடுகளில் நடைபெற்றிருந்தன.

மகாபாரதத்தில் கிருஸ்ண பரமாத்மாவால் அர்ச்சுனனுக்கு பகவத் கீதை உபதேசிக்கப்பட்டதாக நம்பப்படும் குருஷேத்ராவில் 1989 ஆம் ஆண்டிலிருந்து கீதை பெருவிழா குருஷேத்ரா மேம்பாட்டு வாரியத்தால் ஒழுங்கமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





# சாய்ந்தமருது சமுர்த்தி வங்கியின் நடவடிக்கை தொடர்பில் ஆராய்வு!

(எம்.எம்.றம்ஸீன்)

சாய்ந்தமருது பிரதேச சமுர்த்தி வங்கியின் நடவடிக்கைகள், முன்னேற்றங்கள் தொடர்பில் மன்னார் மாவட்ட சமுர்த்தி அலுவலக உத்தியோகத்தர்கள் ஆராய்ந்துள்ளனர்.

மன்னார் மாவட்ட சமுர்த்தி அலுவலக உத்தியோகத்தர்கள் சாய்ந்தமருது சமுர்த்தி வங்கி மற்றும் வங்கிச் சங்கத்திற்கான கள விஜயத்தை ஓய்வுபெற்ற மன்னார் மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் ஐ.அலியார் தலைமையில் மேற் கொண்டனர்.



இதில் கல்முனை பிரதேச செயலக தலைமைப்பீட சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சாலிஹ், சம்மாந்துறை பிரதேச செயலக தலைமைப்பீட சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் யூ.எல்.எம்.சலீம், சமுர்த்தி முகாமையாளர் புவிராஜ் ஆகியோரும் இணைந்திருந்தனர்.

# திருகோணமலை, கிண்ணியா மீன் சந்தைகள் தொடர்பில் அமைச்சர் டக்ளஸுடன் ஆராய்வு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று கொழும்பிலுள்ள கடற்றொழில் அமைச்சில் இடம்பெற்றது.

திருகோணமலை பொது மீன் சந்தை, கிண்ணியா மீன் சந்தை தொடர்பாக இந்தச் சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டது.

அத்துடன், மட்டக்களப்பு வட்டவான், கொக்கட்டிச்சோலை ஆகிய இறால் பண்ணை தொடர்பாகவும் கிழக்கு மாகாண ஆளுநர் கலந்துரையாடினார்.

இந்தக் கலந்துரையாடலின் போது திருகோணமலை நகரசபைச் செயலாளர், கிண்ணியா நகரசபை செயலாளர், கடற்றொழில் அமைச்சின் செயலாளர், அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர், இலங்கை மீன்பிடிக்கூட்டுத்தாபன அதிகாரிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



# பெண்கள் தினத்தை முன்னிட்டு மட்டுவில் கவனவீர்ப்புப் பேரணி!

(பழுவூரான்)

'நமது வீட்டையும், சமூகத்தையும் செழிப்பாக வைத்திருக்கும் பெண்களை சர்வதேச பெண்கள் தினத்தில் வாழ்த்துவோம்' எனும் தொனிப் பொருளில் மட்டக்களப்பில் இயங்கி வரும் சூர்யா பெண்கள் அபிவிருத்தி அமைப்பினரால் காந்தி பூங்காவில் இருந்து கல்லடி பழைய பாலம்வரை கவனவீர்ப்புப் பேரணி ஒன்று நேற்று புதன்கிழமை (06) காலை முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் பேரணியில் கலந்து கொண்ட சூர்யா பெண்கள் அமைப்பினர் 'கூட்டுறவை உருவாக்குவோம்', 'வியர்வை சிந்தி உழைத்த உழைப்பில் கை வைக்காதே', 'பெண்களின் உழைப்பை சுரண்டாதே' , 'கடன் இல்லாத வாழ்வாதாரம் வேண்டும்', 'நுண் கடனை ரத்து செய்', 'உணவுப் பாதுகாப்பை உடனடியாக உறுதி செய்தல் வேண்டும்' போன்ற பதாதைகளை ஏந்தியவாறு பேரணியாகச் சென்றனர்.

இதன்போது பழைய கல்லடிப் பால வாசலில் பெண்கள் அமைப்பினரால் சிறிய வர்த்தக நிலையங்களும் திறக்கப்பட்டிருந்தன.

அத்தோடு ஏராளமான சுய தொழில் உற்பத்திப் பொருள்கள் காட்சிப் படுத்தப்பட்டிருந்தன .

இந்த நிகழ்வில் தெருக்கூத்து , விழிப்புணர்வு நாடகம் போன்றவை சூர்யா பெண்கள் உறுப்பினர்களால் அரங்கேற்றப்பட்டன.










# அட்டாளைச்சேனையில் 170 பேருக்கு காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கல்

(எம்.எப்.நவாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலக நிர்வாக எல்லைக்குள் அரச காணிகளை வைத்திருக்கும் அட்டா ளைச்சேனை, ஒலுவில், பாலமுனை, திராய்க்கேணி, ஆலங்குளம் ஆகிய கிராமங்களை சேர்ந்த பொது மக்க ளுக்கு, நிரந்தர காணி அளிப்புப் பத்தி ரங்கள் மற்றும் காணி உத்தரவுப் பத் திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு அட்டாளைச்சேனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று (06) பிரதேச செயலாளர் பி. ரி.எம்.இர்பான் தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக்க அபேவிக்ரமவும் விசேட அதிதி களாகக் கிழக்கு மாகாணக் காணி நிர் வாக திணைக்களத்தின் உதவிக் காணி ஆணையாளர் கே.எல்.எம்.முசம்மில், அம்பாறை மாவட்ட தலைமையக காணி உத்தியோகத்தர் றாபி மற்றும் அட்டா ளைச்சேனை பிரதேச செயலக கணக் காளர் ஏ.எம். நிபாஸ், நிர்வாக உத்தி யோகத்தர் கே.பி. சலீம், கிராம நிர்வாக உத்தியோகத்தர் ஜவ்பர், காணி உத்தியோகத்தர் இஸ்மாயில் நியாத், காணிப் பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எஸ்.ஜே. தேவானந் மற்றும் கிராம சேவை உத்தி யோகத்தர்களும் , காணிப் பிரிவு உத்தி யோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் 59 காணி அளிப்பு பத்திரங்களும், மற்றும் 111 காணி உத் தரவுப் பத்திரங்களும் வழங்கப்பட்டன.





# தென் எருவில்பற்று பிரதேச செயலகத்தில் மகளிர் தினத்தை முன்னிட்டு நிகழ்வுகள்!

(பழுவூரான், வி.ரி.சகாதேவராஜா))

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகத்தால் 'அவளுடைய பலம் - நாட்டுக்கு முன்னேற்றம்' எனும் தொனிப்பொருளில் இவ்வருடம் கொண்டாடப்படும் மகளிர் தினத்தை முன்னிட்டு பிரதேச செயலாளர் சிவப் பிரியா வில்வரத்னத்தின் வழிகாட்டுத லின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ் வுகள் இடம்பெற்றுள்ளன.

முதலாம் நிகழ்வாக கலைகள் மற் றும் அரங்க விளையாட்டுகளின் மூல மாக 'மகளிர் மனவெழுச்சி ஆற்றுப் படுத்துகை' எனும் 2 தினங்களைக் கொண்ட நிகழ்வு பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெற்றத. கலந்துகொண்ட மகளிர் சங்க உறுப்பி னர்களின் கலைப்படைப்புகள் மற்றும் கலை நிகழ்வுகளுடன் இனிதே நிறைவ டைந்தது.

இந்த நிகழ்வில் பிரதேச செயலர் பிரிவில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 45 பெண்கள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வின் வளவாளர்களாக சமதை பெண்நிலைவாத நண்பிகள் குழுவைச் சேர்ந்த ம. நிரோஷினிதேவி, கலாசார




அபிவிருத்தி உத்தியோகத்தர் களான வி.சிந்துஷா, ப. ராஜதிலகன ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வைப் பிரதேச செயலக சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு உத்தி யோகத்தர்கள் ஒருங்கமைப்புச் செய்தி ருந்தனர்.



# கல்வி அமைச்சின் தொழில் வழிகாட்டல் பயிற்சி நெறி மட்டக்களப்பில் ஆரம்பம்!

(பழுவூரான்)

கல்வி அமைச்சின் முன்னோடி விசேட தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக முன்னெடுக்கப்படும் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான மூன்று மாத கால தொழில் வழிகாட்டல் பயிற்சி நெறி திறன் அபிவிருத்தி திணைக்களத்தால் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் 299 பாடசாலை கள் தெரிவு செய்யப்பட்டு அதற்கான வேலைத்திட்டம் நேற்று புதன்கிழமை (06) ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 30 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் அவர்க ளுக்கான ஆரம்ப நிகழ்வு வின்சன்ட் மகளீர் உயர்தர தேசிய பாடசாலையில் மாவட்ட திறன்கள் அபிவிருத்தி உத்தி



யோகத்தர் கே.சிவகுமார் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திரு மதி ஜஸ்டீனா முரளீதரன் கலந்து கொண்டு கல்வி அமைச்சின் குறித்த முன்னோடி விசேட தொழில் வழிகாட்டல் வேலைத்திட்டம் தொடர்பாக தெளிவூட் டல்களை வழங்கினார். இந்த நிகழ்வில் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வீ.வாசுதேவன், மட்டக்களப்பு வலயக் கல்வி அலுவலகத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம். ஹரிகரராஜ் ஆகியோ ரும் கலந்துகொண்டனர்.

# சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியின் மாணவருக்குக் கற்றல் உபகரணம்

(த.சுபேசன்)

சுன்னாகம் பாரம்பரிய ரோட் டரிக் கழகமும் சுழிபுரம் விக் டோரியா கல்லூரியின் இடை வினைக் கழகமும் இணைந்து அண்மையில் விக்டோரியா கல் லூரியின் தேவைப்பாடுடைய மாணவர்களுக்குக் கற்றல் உப கரணங்களை வழங்கின.

இந்தக் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழக உறுப் பினர்கள், விக்டோரியா கல்லூ ரியின் இடைவினைக் கழக உறுப் பினர்கள் கலந்து கொண்டனர்.





# தேர்தல் முறைகள், சட்ட கட்டமைப்பு தொடர்பான செயலமர்வு மட்டுவில்!

(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் யுவதிகளுக்கு தேர்தல் முறைகள் மற்றும் சட்டக் கட்டமைப்பு தொடர்பான பயிற்சிச் செயலமர்வு மட்டக்களப்பில் இடம்பெற்றது.

கிராமிய அபிவிருத்தித் திட்டமிடல் அமைப்பின் ஏற்பாட்டில் அதன் பணிப்பாளர் வி.ரமேஷானந்தன் தலைமையில் வை.எம்.சி.ஏ மண்டபத்தில் நேற்று புதன்கிழமை (06) இடம்பெற்றது.

கிராமிய அபிவிருத்தி திட்டமிடல் அமைப்பின் ஏற்பாட்டில் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தின் பங்கு பற்றுதலுடன் இந்தச் செயலமர்வு இடம்பெற்றது.

இந்தச் செயலமர்வின் வளவாளராக ஓய்வு பெற்ற தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் எம்.எம். முகமட், வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலைய தேசிய இணைப்பாளர் ஏ.எம்.என். விக்டர் உள்ளிட்டோர் கலந்து கொண்டு வளவாண்மை மேற்கொண்டுள்ளனர்.

இந்தச் செயலமர்வில் கிராமிய அபிவிருத்தி திட்டமிடல் அமைப்பின் கொள்வனவு உத்தியோகத்தர் பீ. மேகலநாதன், கள உத்தியோகத்தர் எஸ்.உபதாரணி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கிராமிய அபிவிருத்தித் திட்டமிடல் அமைப்பின் ஊடாக சிவில் சமூக செயற்பாடுகளில் ஈடுபடும் இளைஞர், யுவதிகளை வலுப்படுத்தும் செயற்றிட்டத்தின் கீழ் இந்தச் செயலமர்வு இடம்பெற்றது.

கிராமிய அபிவிருத்தித் திட்டமிடல் அமைப்பானது சுமார் 21 வருடகாலமாக மாவட்டத்தில் சேவையாற்றி வருகிறது.

இந்த அமைப்பின் ஊடாக பாலூட்டும் தாய்மார்களுக்கு போசாக்கான சத்துமா வழங்குதல், போசனை குறைந்த சிறார்களுக்கு உணவு வினியோகம், வறுமைக் கோட்டின் கீழ் வாழும் தெரிவு செய்யப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் போன்ற பல்வேறுபட்ட செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





# அன்னமலை பிரதேச வைத்தியசாலையின் நடவடிக்கையைப் பார்வையிட்ட பணிப்பாளர்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் சகீலா இஸ்ஸடீன், பிராந்திய திட்டமிடல் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம். மாஹிர் ஆகியோர் நேற்று (06) அன்னமலை பிரதேச வைத்தியசாலைக்கு திடீர் விஜயம் மேற்கொண்டு வைத்தியசாலையின் நடவடிக்கைகளைப் பார்வையிட்டனர்.

இதன்போது பி.எஸ்.எஸ்.பி. திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டடத்தில் அமையப்பெறவுள்ள மருந்தகம் தொடர்பாகவும் வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரியிடம் கலந்துரையாடினார்.



பணிப்பாளர் புதிய கட்டடத்தில் மருந்தகத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார்.

அத்துடன் வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவு, வெளி நோயாளர் பிரிவு, களஞ்சியசாலை, விடுதி மற்றும் மருந்தகம் ஆகியவற்றையும் பார்வையிட்டார்.





# கற்பிட்டியில் தமிழ் பாடசாலைக்கு சிமாட் அறை அமைத்து வழங்கல்!

வடமேற்கு மாகாணத்தில் உள்ள பெரும்பாலான தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவ பாடசாலைகள் பௌதிக மற்றும் மனித வளம் குறைவால் கல்வி மேம்பாட்டில் வீழ்ச்சி காணப்படுகின்றது.

இவ்வகையில் 75 இற்கும் அதிகமான மாணவர்களைக் கொண்ட பாடசாலை மாணவர்களுக்கு 'டிஜிட்டல் ஸ்மார்ட் போர்ட்' ஊடாக கற்பிக்கும் முறைமையை வழங்கி மனிதவள இழப்பை ஈடு செய்ய ஐ.எம்.எச். ஓ. நிறுவனமும் ரட்ணம் நிதியமும் இணைந்து வலயக் கல்வி அலுவலக ஒத்துழைப்புடன் செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றன.

இதன் அடிப்படையில் கடந்த முதலாம் திகதி புத்தளம் நகரில் இருந்து ஏறத்தாள 50 கிலோ மீற்றர் தொலைவில் இருக்கும் கற்பிட்டியில் உள்ள அரசினர் றோமன் கத்தோலிக்க தமிழ் மகா வித்தியாலயத்துக்கு ஐ.எம்.எச். ஓ. நிறுவன வதிவிட பிரதிநிதி முத்து இராதாகிருஷ்ணன் உள்ளிட்ட குழு விஜயம் செய்தது.

இப்பாடசாலையில் 320 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இப்பாடசாலை மிகவும் பின்னடைவான சூழலில் இருக்கின்றது. மாணவர் வரவு மிக குறைவு. இத்தகைய சவால்களைக் கொண்ட இப்பாடசாலை செயற்றிட்டத்தில் உள்வாங்கப்பட்டது.

இந்தப் பாடசாலைக்கு ஐ.எம்.எச். ஓ. நிறுவனம் மற்றும் ரட்ணம் நிதியம் ஆகியன இணைந்து வழங்கப்பட்ட சிமாட் அறையை அமைத்து உத்தியோக பூர்வமாகக் கையளித்துள்ளன.

அத்துடன் ஆசிரியர்களுக்கு இது தொடர்பில் பயிற்சிகள் வழங்கப்பட்டள்ளன.





# காத்தான்குடியில் மாணவர்களுக்கு நடைபெற்றுள்ள ஊடகச்செயலமர்வு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சுதந்திர ஊடக கண்காணிப்பு மையத் தின் ஏற்பாட்டில் நவீன தொடர்பாடலும் ஊடகக் கல்வியும் எனும் தலைப்பில் பாடசாலை மாணவர்களுக்கான செயலமர்வு நேற்று (06) காத் தான்குடி சம்மேளனத்தின் ஷேகுல் பலாஹ் கல்வி நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

சுதந்திர ஊடக கண்காணிப்பு மையத்தின் பொதுச் செயலாளர் இப்றான்ஸா பவ்றுத்தீன் தலைமையில் இடம்பெற்ற இந்தச் செயலமர்வில் பிரதம அதிதியாக காத்தான்குடி பிரதேச கல்விப் பணிப்பாளர் ஏ.ஜீ.எம்.ஹக்கீம் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் வளவாளராகக் கலந்து கொண்ட சுதந்திர ஊடகக் கண் காணிப்பு மையத்தின் பணிப்பாளரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான எம்.நௌஷாத் மொஹிதீன் ஊடகத்தின் முக்கியத்துவம், தனிமனித வாழ்வில் ஊடகங்களின் வகிபாகங்கள், நாட்டின் ஜனநாயகததுக்கு



ஊடகத்தின் பங்களிப்பு போன்ற தலைப்புக்களில் விரிவுரை வழங்கினார்.

இந்த நிகழ்வில் நூற்றுக்கு அதிக மான பாடசாலை மாணவர்கள் பங்கு பற்றினர். அவர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இதன் போது சுதந்திர ஊடக கண் காணிப்பு மையத்தின் மட்டக்களப்பு மாவட்ட பணிப்பாளர் என்.எம்.எம். பாயிஸ்ஸும் கலந்து கொண்டார்.

# தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தைக்காக அறிவாலயம் செல்கிறார் கமல்ஹாசன்

தொகுதி பங்கீடு தொடர்பாக தி.மு.க. குழுவுடன் நேரடியாக பேச்சுவார்த்தை நடத்த நடிகரும், மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவருமான கமல்ஹாசன், தி.மு.க. தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயம் செல்லவிருக்கின்றார் என தகவல் வெளியாகியுள்ளது.

மக்களவை தேர்தல் நடக்கவுள்ளதை அடுத்து தி.மு.க. கூட்டணியில் தொகுதி பங்கீடு இறுதிக்கட்டத்தை எட்டவுள்ளது. வி.சி.க. மற்றும் காங்கிரஸ் கட்சிகளுக்கு மட்டும் தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டி உள்ளது.

இந்த நிலையில் தி.மு.க. கூட்டணியில் நடிகர் கமல்ஹாசனின் மக்கள் நீதி மய்யம் கட்சி இணையவிருப்பதாக கடந்த சில நாட்களாகவே செய்திகள் வெளியாகிவந்தன. அதை உறுதிப்படுத்தும் வகையில் கமலும் கூட்டணி பேச்சுவார்த்தை நடந்து வருகின்றேன் என வெளிப்படுத்தி இருந்தார்.

தொடர்ந்து தி.மு.க. உடன் மக்கள் நீதி மய்யம் மறைமுகமாக கூட்டணி பேச்சுவார்த்தை நடத்தி வந்ததாக சொல்லப்பட்ட நிலையில், தொகுதி பங்கீடு தொடர்பாக தி.மு.க. குழுவுடன் நேரடியாக பேச்சுவார்த்தை நடத்த நடிகரும், மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவருமான கமல்ஹாசன், இன்று தி.மு.க. தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயம் செல்லவுள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.



கமல்ஹாசன் நேரடியாக செல்வதால் தொகுதி பங்கீடு இன்றே இறுதி செய்யப்பட வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

# அ.தி.மு.கவுடன்தான் கூட்டணி; தே.மு.தி.க. பிரேமலதா அறிவிப்பு

அ.தி.மு.கவில் மக்களவை தேர்தல் கூட்டணி தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த அமைக்கப்பட்ட கே.பி. முனுசாமி, எஸ்.பி.வேலுமணி, பி.தங்கமணி உள்ளிட்டோர் இடம்பெற்ற குழு சில தினங்களுக்கு முன்பு தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்தை நேரில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியது.

இதனிடையே கூட்டணி குறித்து பேச்சுவார்த்தை நடத்த தே.மு.தி.கவில் குழு அமைத்து பிரேமலதா நேற்று உத்தரவிட்டிருந்தார். அதில், கட்சியின் துணைச் செயலாளர் எல்.கே.சுதீஷ், அவைத் தலைவர் வி.இளங்கோவன், கொள்கை பரப்புச் செயலாளர் அழகாபுரம் ஆர்.மோகன்ராஜ், துணைச் செயலாளர் ப.பார்த்தசாரதி ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

இந்த நிலையில், வி.இளங்கோவன், அழகாபுரம் ஆர்.மோகன்ராஜ், ப. பார்த்தசாரதி ஆகியோர் சென்னை ராயப்பேட்டையில் உள்ள அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் அ.தி.மு.க. தொகுதி பங்கீட்டு குழுவை சேர்ந்த கே.பி.முனுசாமி, எஸ்.பி.வேலுமணி, பி.தங்கமணி, பா.பென்ஜமின் ஆகியோரை நேற்று சந்தித்து 2 ஆம் கட்ட பேச்சுவார்த்தை நடத்தினர்.

சுமார் 1 மணி நேரம்நடைபெற்ற பேச்சுவார்த்தையில், விருதுநகர், கிருஷ்ணகிரி உள்ளிட்ட 4 தொகுதிகளை தே.மு.தி.கவினர் கேட்டுள்ளனர் எனவும் அது குறித்து பழனிசாமியிடம் கலந்தாலோசித்து சொல்வதாக அ.தி.மு.கவினர் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது.



பேச்சுவார்த்தையின் முடிவில், தே.மு.தி.க. அவைத் தலைவர் இளங்கோவன் செய்தியாளர்களிடம் கூறும் போது,

“இந்த பேச்சுவார்த்தையில் அ.தி.மு.க. – தே.மு.தி.க. கூட்டணி உறுதியாகியுள்ளது. தொகுதி பங்கீடு தொடர்பாக அடுத்தடுத்த கட்ட பேச்சுவார்த்தையில் முடிவு செய்யப்படும். இப்போதும், எதிர்காலத்திலும் தே.மு.தி.க. கூட்டணி வெற்றிக் கூட்டணியாக இருக்கும்.”– என்றார்.

2011 சட்டப்பேரவை தேர்தலுக்கு பின்னர் தமிழகத்தில் அங்கீகரிக்கப்பட்ட மாநில கட்சி என்ற அந்தஸ்தை தே.மு.தி.க. பெற்றது. அதன் பின்னர் எந்த தேர்தலிலும் அக்கட்சியின் வேட்பாளர்கள் வெற்றிபெறவில்லை. விரைவில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி என்ற அந்தஸ்தை இழக்க உள்ளது.

அதை தக்கவைத்துக் கொள்ள வேண்டிய நிர்பந்தத்தில் தே.மு.தி.க. உள்ளது. அதனால், அ.தி.மு.கவுடன் கூட்டணி அமைப்பதில் மும்முரமாக இருப்பதாக தே.மு.தி.க. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



# அ.தி.மு.க. சார்பில் போட்டியிட 2,475 பேர் விருப்ப மனு தாக்கல்

அ.தி.மு.க. சார்பில் மக்களவைத் தேர்தலில் போட்டியிட 2 ஆயிரத்து 475 பேர் விருப்ப மனுக்களை பூர்த்தி செய்து வழங்கியுள்ளனர்.

அ.தி.மு.க. சார்பில் தமிழகம், புதுச்சேரியில் உள்ள 40 தொகுதிகளிலும் போட்டியிட விரும்புவோர் விருப்ப மனு அளிக்க, விருப்ப மனு விநியோகம் சென்னை ராயப்பேட்டையில் உள்ள கட்சி தலைமை அலுலகத்தில் கடந்த பெப்ரவரி 21 ஆம் திகதி தொடங்கியது.

விருப்ப மனுக்களை, பொதுத் தொகுதியில் போட்டியிட விரும்புவோர் 20 ஆயிரம் ரூபா, தனித் தொகுதியில் போட்டியிட விரும்புவோர் 15 ஆயிரம் ரூபா கட்டணத் தொகையை செலுத்தி வாங்கினர்.

விருப்ப மனுக்கள் விநியோகம் கடந்த மார்ச் 1 ஆம் திகதியுடன் நிறைவடைய இருந்த நிலையில், நேற்று வரை நீட்டிக்கப்பட்டது. நேற்று மாலை 5 மணியுடன், விருப்ப மனுக்களை பூர்த்தி செய்து திரும்ப வழங்குவதற்கான அவகாசம் நிறைவடைந்தது. அதன்படி மொத்தம் 2 ஆயிரத்து 400 பேர் விருப்ப மனுக்களை பூர்த்தி செய்து அளித்துள்ளனர்.

இந்த விருப்பு மனுக்கள் அடிப்படையில் மாவட்ட செயலாளர்களுடன், கட்சியின் பொதுச்செயலாளர் பழனிசாமி கலந்தாலோசித்து வேட்பாளர்களை அறிவிக்கவுள்ளார்.

# இண்டியா கூட்டணி தலைவர்கள் மதி இழந்தவர்களாகி வருகின்றனர்

## பிரதமர் மோடி தெரிவிப்பு




“இண்டியா கூட்டணி தலைவர்கள் மதி இழந்தவர்களாகி வருகின்றனர். அதனால் அவர்கள் மோடியை திட்ட ஆரம்பித்துள்ளனர்.”- இவ்வாறு மேற்கு வங்கத்தில் நடந்த பேரணியில் பிரதமர் மோடி தெரிவித்தார்.

இந்தியாவில் முதன்முதலாக நீருக்கு அடியில் செல்லும் மெட்ரோ ரயில் சேவையை மேற்கு வங்க மாநிலம் கொல்கத்தாவில் பிரதமர் நரேந்திர மோடி நேற்று தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து சந்தேஷ்காலி அமைந்துள்ள வடக்கு 24 பர்கானஸ் மாவட்டத்தின் பராசந்தில் இடம்பெற்ற பொதுக்கூட்டப் பேரணியில் பிரதமர் மோடி கலந்து கொண்டு பேசினார்.

இதன்போது அவர் மேலும் உரையாற்றுகையில்,

“என்.டி.ஏ. கூட்டணி மீண்டும் ஆட்சிக்கு வந்து விடும் என்பதால் இண்டியா கூட்டணி தலைவர்கள் மதி இழந்தவர்களாகி வருகின்றனர். அதனால் அவர்கள் மோடியை திட்ட ஆரம்பித்துள்ளனர். இண்டியா கூட்டணியில் உள்ள ஊழல்வாதித் தலைவர்கள் எனது குடும்பம் பற்றி கேட்கின்றனர். எனக்கு குடும்பம் இல்லாததால் நான் குடும்ப வாதத்துக்கு எதிரானவன் என்று கூறுகின்றனர்.

எனது குடும்பம் பற்றி அவர்கள் அறிந்து கொள்ள விரும்பினால், அதற்கு அவர்கள் இங்கே வர வேண்டும். இந்தக் கூட்டத்தில் பங்கேற்றுக் கொண்டிருக்கும் பெண்கள் அனை வரும் மோடியின் குடும்பமே.

மோடி துன்பத்தினால் அவதியுறும்போது அத்துன்பத்தில் இருந்து பெண்கள்தான் என்னைப் பாதுகாக்கிறார்கள். மேற்கு வங்கத்தில் இருக்கும் பெண்கள் அனைவரும் எனக்கு துர்கா மாதாக்கள். இன்று நாட்டின் ஒவ்வொருவரும் அவர்களை மோடியின் குடும்பம் என்று அழைக்கின்றனர்.” – என்றார்.



# செங்கடலில் சரக்கு கப்பல் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல்

## மூவர் பலி



செங்கடலில் சரக்கு கப்பல் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் நடத்திய தாக்குதலில் 3 பணியாளர்கள் உயிரிழந்துள்ளனர்.

மேலும், நால்வர் காயமடைந்துள்ளனர் என அமெரிக்க பாதுகாப்பு படையினர் தெரிவித்துள்ளனர்.

யேமனின் ஏடன் துறைமுகத்தில் இருந்து 50 கடல் மைல் தொலைவில் Barbados கொடியுடன் பயணித்த கப்பல் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதலின் போது 20 பணியாளர்கள் மற்றும் 3 பாதுகாப்பு தரப்பினர் கப்பலில் இருந்துள்ளனர். அவர்களில் இருவர் இலங்கையர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

தாக்குதலை தொடர்ந்து கப்பலில் தீப்பரவல் ஏற்பட்டதாக அமெரிக்க பாதுகாப்பு படையினர் தெரிவித்துள்ளனர்.

கப்பலில் இருந்த ஏனைய உறுப்பினர்கள் தொடர்பில் தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.





# ரஷ்யாவின் கொலை முயற்சியிலிருந்து உயிர் தப்பினார் உக்ரைன் ஜனாதிபதி

கருங்கடல் துறைமுகமான ஒடெசாவுக்கு பயணம் மேற்கொண்ட உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி, ரஷ்யாவின் படுகொலை திட்டத்தில் இருந்து உயிர் தப்பியுள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

உக்ரைன் ஜனாதிபதியின் வாகன அணிவகுப்பு அருகே ரஷ்ய ஏவுகணை தாக்கிய நிலையில், பலர் கொல்லப்பட்டுள்ளனர். பலர் காயங்களுடன் தப்பியுள்ளனர் என ஜெலென்ஸ்கி குறிப்பிட்டுள்ளார்.

இந்த தாக்குதலானது, கிரேக்க பிரதமருடன் ஜெலென்ஸ்கி பயணித்த வாகன அணிவகுப்பை இலக்கு வைத்தே மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஜெலென்ஸ்கி மற்றும் கிரேக்க பிரதமர் பயணித்த வாகனத்திலிருந்து சுமார் 500 முதல் 800 மீற்றர் தொலைவிலேயே ரஷ்ய ஏவுகணை தாக்கியுள்ளது.

இதில் பாதுகாப்பு வீரர்கள் ஐவர் கொல்லப்பட்டுள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது.

தாக்குதல் சம்பவத்தை அடுத்து, பத்திரிகையாளர் சந்திப்பில் பேசிய ஜெலென்ஸ்கி, நாங்கள் யாரை எதிர்கொள்கிறோம் என்பதை பார்த்தீர்களா? எப்போது எங்கே என்ன நடக்கும் என்பதை எதிர்பார்க்க முடியாது என தெரிவித்துள்ளார்.

நடந்த சம்பவத்தை கிரேக்க பிரதமரும் கண்கூடாக பார்த்துள்ளார். இராணுவ அணிவகுப்பா அல்லது பொது மக்களா, சர்வதேச விருந்தினர்களா என்பது குறித்து அவர்கள் கவலை கொள்வதில்லை என்றும் ஜெலென்ஸ்கி குறிப்பிட்டுள்ளார்.

தாமதப்படுத்தாமல் மேற்கத்திய நாடுகள் ஆயுத உதவிகளை முன்னெடுக்க வேண்டும் என்றே தாம் கோரிக்கை வைப்பதாகவும் ஜெலென்ஸ்கி மீண்டும் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, ஒடெசா துறைமுகத்தின் தேவை மற்றும் முக்கியத்துவம் குறித்து ஜெலென்ஸ்கியும் அவரது அதிகாரிகள் தரப்பும் தமக்கு விளக்கமளித்துள்ளனர் என கிரேக்க பிரதமர் தெரிவித்துள்ளார்.

மேலும், உண்மையில் இந்தப் போர் அனைவரையும் பாதிக்கிறது என்பதை நாங்கள் உணர்ந்துள்ளோம் என்வும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



# ஹமாஸ் அமைப்பின் தாக்குதலில் இஸ்ரேல் படைவீரர் உயிரிழப்பு

காசாவின் தெற்கு பகுதியில் ஹமாஸ் அமைப்பினர் நடத்திய தாக்குதலில் இஸ்ரேல் படைவீரர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். மேலும் ஐவர் படுகாய மடைந்துள்ளனர்.

காசாமீது முழு அளவிலான போரை முன்னெடுத்துள்ள இஸ்ரேல் படையினர் நடத்திவரும் கண்மூடித்தனமான தாக்குதல்களில் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர். பெருமளவான மக்கள் படுகாயமடைந்து வருகின்றனர்.

இவ்வாறு போரில் பெரும் இழப்புகள் ஏற்பட்டு வருகின்றபோதிலும், போர் நிறுத்தத்திற்கான எந்தவொரு அறிகுறியும் தெரியவில்லை.

இந்த நிலையில் காசாவின் தெற்கு பகுதியில் போரில் ஈடுபட்ட இஸ்ரேல் படையினரை இலக்கு வைத்து ஹமாஸ் அமைப்பினர் நடத்திய தாக்குதலில் ஒரு வீரர் உயிரிழந்துள்ளார். மேலும் ஐவர் படுகாயமடைந்துள்ளனர்.

அத்துடன், இந்த போரில் இஸ்ரேல் தரப்பில் இதுவரை 247 படையினர் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப் படுகிறது.

# டுபாய் உணவகத்தில் தங்கம் கலந்து உணவு





உணவகமொன்றில் 24 கரட் தங்கத்தூள் கலந்து உணவு பரிமாறப்படும் காணொளியொன்று சமூக வலைத்தளங்களில் அனைவர் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

டுபாயில் பேரங்காடியொன்றில் இயங்கிவரும் உணவகமொன்றிலேயே “தால் கஷ்கான்” என்ற இந்த தங்க உணவு பரிமாறப்படுகிறது.

புகழ்பெற்ற சமையல் கலை நிபுணரான ரன்வீர் பிரார் டுபாயில் நடத்திவரும் உணவகத்திலேயே பருப்புக் கறியில் தங்கத்தூள் கலந்து இந்த வித்தியாசமான உணவை பரிமாறுகின்றார்.

விசேடமாகத் தயாரிக்கப்படும் இந்தப் பருப்பு குழம்பானது ஒரு மரப்பெட்டியில் பிரத்யேகமாக கொண்டு வரப்பட்டு வாடிக்கையாளர்களுக்கு பரிமாறப் படுகிறது.

அதிலும் சிறப்பான அம்சம் என்னவென்றால் 24 காரட் தங்கத் தூளானது வாடிக்கையாளர்களுக்கு அவர்கள் கண் முன்பே கலக்கப்பட்டு, நெய்யுடன் பரிமாறப்படுகிறது. இது தொடர்பான காணொளி சமூக வலைத்தளங்களில் வெகுவாக பரவி வருகின்றது.



# வடக்கின் பெரும் சமர் ஆரம்பம்

**(எஸ்.நிதர்ஷன்,
பிரபாகரன் டிலக்சன்)**

வடக்கின் பெரும் சமர் என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் இடையிலான துடுப்பாட்டப் போட்டிகள் இன்று காலை ஆரம்பமாகின.

117 ஆவது முறையாக இடம்பெறும் இப்போட்டிகள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின. போட்டிகள் 7,8,9 ஆம் திகதிகள் என மூன்று நாட்கள் இரண்டு இனிங்ஸ்களாக நடைபெறவுள்ளன.

நேசகுமார் எபனேசர் ஜெஷில் தலைமையிலான யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியும், நிசாந்தன் அஜய் தலைமையிலான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் களமிறங்கியுள்ளன.

போட்டிகளின் ஆரம்ப நிகழ்வு இன்று காலை 9 மணியளவில் இரண்டு கல்லூரிக் கீதங்களுடன் ஆரம்பித்ததுடன் இரண்டு கல்லூரி அணி வீரர்களும் கைலாகு கொடுத்து அறிமுகப்படுத்தினர்.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்துக் களமிறங்கியுள்ளது.

மதிய நேர இடைவேளை வரை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 24 ஓவர்களை எதிர்கொண்டு 4 விக்கெட்டுகளை இழந்து 74 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. துடுப்பாட்டத்தில் அணி சார்பில் சிந்துஜன் 25 ஓட்டங்களையும், நியூட்டன் 24 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக்கொண்டனர்.

பந்து வீச்சில் பரியோவான் கல்லூரி சார்பில் கவிசன் 2 விக்கெட்டுகளையும், ரண்டியோ மற்றும் மாதுளன் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்கள்.

போட்டிகள் தொடர்ச்சியாக 7,8,9 ஆம் திகதிகள் என மூன்று நாட்கள் இரண்டு இனிங்ஸ்களாக நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.













கனடா முரசு

பக்கங்கள் - 4

வியாழக்கிழமை 07/03/2024

## றோயல் கனேடியன் மவுண்ட் பொலிஸ் மீது சீனக் குழுக்களினால் வழக்குகள் தாக்கல்

கியூபெக், மார்ச்07

கியூபெக் பகுதிகளில் சீனர்கள் சட்டவிரோத பொலிஸ் நிலையங்களை வைத்திருந்தனர் எனத் தெரிவித்து றோயல்

C2



# புதிய ஜனநாயகக் கட்சியிலிருந்து விலகினார் செலினா றொபின்சன்!

## யூத எதிர்ப்பு சார்ந்த விடயங்களைத் தமது கட்சி சரிவரக் கையாளவில்லை என்றும் குற்றச்சாட்டு

பிரிட்டிஷ் கொலம்பியா, மார்ச் 07

பிரிட்டிஷ் கொலம்பியாவின் முன்னாள் அமைச்சரும், புதிய ஜனநாயகக் கட்சியின் உறுப்பினருமான செலினா றொபின்சன் தாம் கட்சியிலிருந்து விலகி சுயாதீனமாக செயற்படப் போகிறார் எனத் தெரிவித்துள்ளார்.

யூத இனத்தவரான செலினா றொபின்சன், புதிய ஜனநாயகக் கட்சியும், கட்சியின் சக உறுப்பினர்களும் யூத எதிர்ப்பு சார்ந்த விடயங்களை முறையாகக் கையாளாதமையால் தாம் கட்சியை விட்டு விலகுகிறார் எனத் தெரிவித்துள்ளார்.

C2



# காசாவிற்கான ஐ.நா.அமைப்புக்கு உதவுவது குறித்து முடிவில்லையாம்

ஒன்ராரியோ, மார்ச்07

காசா பிராந்தியத்திற்கான ஐக்கிய நாடுகளின் உதவி நிறுவனத்திற்கு தொடர்ந்து நிதியளிப்பதா என்பது குறித்து கனடா இதுவரையில் தீர்மானிக்கவில்லை எனத் தெரியவருகின்றது.

கடந்த ஜனவரி மாதத்தில் உன்ர்வா (UNRWA) என அறியப்படும் பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா. நிவாரண மற்றும் பணி நிறுவனத்தின் நிதிகள் நிறுத்தப்பட்ட ஏனை நாட்டு நிறுவனங்களுடனான கலந்துரையாடல்களும் இதில் உள்ளடங்குகின்றன.

C2



# கொவிட் பெருந்தொற்றின் விடயங்களை கையாள்வதற்கு கனேடிய கொவிட் சங்கம்

## புதிய தேசிய இலாப நோக்கற்ற அமைப்பு உருவாக்கம்

ஒன்றாரியோ, மார்ச்07

கொவிட்-19 பெருந்தொற்றின் நீண்ட காலத் தாக்கங்களை கற்பதற்கும், மேலதிக நோயுறலைத் தடுப்பதற்கு கனேடிய கொவிட் சங்கம் என்ற புதிய தேசிய இலாப நோக்கற்ற அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

பொது சுகாதார ஸ்தாபனங்கள் கொவிட் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் விழிப்புணர்வு செயற்பாடுகளை நடத்தியுள்ளமையால் இவ்வாறன அமைப்புக்கான தேவை எழுந்ததாக இந்தச் சங்கத்தின் ஸ்தாபகர்கள் தெரிவித்துள்ளனர்.

பொது சுகாதார ஸ்தாபனம் விட்டுச் சென்றுள்ள இடைவெளியை இந்த அமைப்பு நிரப்பும் என ஸ்தாபகர்கள் குறிப்பிடுகின்றனர்.

அல்பேர்ட்டாவில் தற்போது கொவிட் தொடர்பில் பேசப்படுவதே இல்லையெனவும், பொது சுகாதார செயற்பாடுகளில் இருந்து அது முற்றாக நீக்கப்பட்டுள்ளது எனவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

2022ஆம் ஆண்டில், கனடாவில் இதய நோய் மற்றும் புற்றுநோயிற்கு அடுத்ததாக அதிக உயிரிழப்புக்களை ஏற்படுத்திய நோயாக கொவிட்-19 பதிவாகியுள்ளது.

# ஸ்ரைக்நைன் எனும் சக்தி மிக்க விஷத்தின் பயன்பாட்டை முழுமையாக நிறுத்த முடிவு!



ஒன்றாரியோ, மார்ச்07

ஸ்ரைக்நைன் எனும் சக்தி மிக்க விஷத்தினை பயன்பாட்டினை முழுமையாக நிறுத்த ஹெல்த் கனடா தீர்மானித்துள்ளது.

வேட்டை விலங்குகளைக் கட்டுப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் ஸ்ரைக்நைனின் பயன்பாடு குறித்து முன்னெடுக்கப்பட்ட ஆய்வுக் கற்கையைத் தொடர்ந்தே ஹெல்த் கனடா இந்த முடிவை எடுத்துள்ளது.

மார்ச் 6ஆம் திகதியன்று களைமுகாமைத்துவ ஒழுங்கமைப்பு நிறுவனத்தினால் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இந்தத் திட்டம் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக ஹெல்த் கனடா தெரிவித்துள்ளது.

2022ஆம் ஆண்டில் ஸ்ரைக்நைன் பயன்பாடு தொடர்பில் வெளியான அனுமதியை இரத்துச் செய்வதாக இந்தப். புதிய அறிவிப்பு அமைந்துள்ளது.

கலந்தாய்வின் போது பெறப்பட்ட புதிய தகவல்களே இந்த முடிவை எடுப்பதற்கு வழிகோலியதாக ஹெல்த் கனடா தெரிவிக்கின்றது.

### புதிய ஜனநாயக...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நவீன இஸ்ரேல் தேசமானது மோசமான நிலம் ஒன்றில் ஸ்தாபிக்கப்பட்டது என்ற கருத்தைக் கூறியதன் பின்னர் கடந்த மாதத்தில் தமது கல்வி அமைச்சர் பொறுப்பில் இருந்து அவர் இராஜினாமாச் செய்திருந்தார்.

இவரது இந்தக் கருத்துக்கு பலஸ்தீன ஆதரவு குழுக்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தன.

தமது அமைச்சுப் பதவியில் இருந்து விலகிய நாள் முதலாய் கட்சிக்குள் தாம் நடத்தப்படும் விதம் தொடர்பில் தாம் அதிருப்தியடைந்துள்ளளார் என மார்ச் 6ஆம் திகதி ஊடகங்களிடம் கருத்து தெரிவித்த றொபின்சன் குறிப்பிட்டார்.

### றோயல் கனேடியன்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கனேடியன் மவுன்ட் பொலிஸாருக்கு எதிராக சீனக் குழுக்களால் வழக்குகள் தாக்கல் செய்யப்படுகின்றன.

மொன்றியலின இரண்டு மொன்றியல்-சார் சீன குழுக்களும், அதன் பணிப்பாளரும் நிறுவனத்தின் சார்பில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

றோயல் கனேடியன் மவுன்ட் பொலிஸார் முன்வைத்த குற்றச்சாட்டுக்கள் ஆதரமற்றவை என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

### காசாவிற்கான...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த ஜனவரி மாதத்துடன் நிதியை முடக்கிய ஏனைய நிறுவனங்களைக் கொண்ட சுமார் 16 நிறுவனங்களுடனான உரையாடல்களும் இதில் உள்ளடங்குகின்றன.




# பலஸ்தீன ஆதரவு போராட்டத்திற்கு கியூபெக்கில் சில தடையுத்தரவுகள்

கியூபெக்,மார்ச்07

பலஸ்தீன ஆதரவு போராட்டத்திற்கு கியூபெக்கில் இடைக்கால தடையுத்தரவு அளிக்கப்பட்டுள்ளது.

மொன்ரியலில் அமைந்துள்ள யூத அமைப்பு ஒன்றின் 50 மீற்றர் எல்லைக்குள் பிரவேசிப்பதற்கு பலஸ்தீன ஆதரவு போராட்டக்காரர்களுக்கு இந்தத் தடையுத்தரவு அளிக்கப்பட்டுள்ளது.

மொன்ரியலில் உள்ள பெரும்பாலான கட்டடங்களில் அருகில் பிரவேசிப்பதற்கு சுமார் ஐந்து பலஸ்தீன ஆதரவு அமைப்புக்களுக்கு கியூபெக் நீதிமன்றத்தால் இந்தத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

யூத சமூக நிலையத்தை போராட்டக்காரர்கள் சூழ்ந்து கொண்டு, மக்கள் நிலையத்திற்குள் பிரவேசிக்க முடியாது தடைசெய்தமையின் விளைவாக, இஸ்ரேல் மற்றும் யூத விவகாரங்களுக்கான நிலையத்தினால் நீதிமன்றத்தில் இந்த தடையுத்தரவு கோரப்பட்டுள்ளது.

மக்களுக்கு தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான உரிமை இருந்த போதிலும், இந்தப் போராட்டங்களை எல்லையை மீறிச் செல்வதாக இஸ்ரேல் மற்றும் யூத விவகாரங்களுக்கு நிலையத்தின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.



# நோயுற்ற பிரி. மன்னர் சார்ள்ஸுடன் கனேடியப் பிரதமர் ட்ரூடோ பேச்சு!

ஒன்ராரியோ, மார்ச்07

புற்றுநோய் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ள பிரிட்டிஷ் மன்னர் சார்ள்ஸுடன் கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ முதன்முறையாக இணைய வழியாகக் கதைத்துள்ளார்.

காணொலி இணைப்பின் ஊடாக இந்த உரையாடல் இடம்பெற்றுள்ளது.

'மன்னர் சார்ள்ஸுடன் கதைத்தது மகிழ்ச்சியாக இருந்தது' என கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தமது எக்ஸ் இணையத்தளத்தில் தெரிவித்துள்ளார்.

மன்னர் சார்ள்ஸ் மற்றும் அவரது குடும்பத்தினரின் நலன் குறித்துக் கனேடியர்கள் அக்கறை கொண்டுள்ளனர் என ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

ஒரு மாதத்திற்கு முன்னர் மன்னர் சார்ள்ஸ் புற்றுநோயிற்கு சிகிச்சைப் பெற்று வருகிறார் எனப் பக்கிங்ஹாம் அரண்மனை தெரிவித்திருந்தது.



# அதிதீவிர வெறுப்பு பேச்சுக்களே அவசரகால குழுவின் விசாரணக்கு!

ஒன்ராரியோ, மார்ச்07

அதிதீவிர இணை வெறுப்புப் பேச்சுக்கள் பற்றிய விசாரணை மாத்திரமே அவசரகால குழுவுக்கு கொண்டுச் செல்லப்படும் என நீதி அமைச்சு தெரிவித்துள்ளது.

'மிகவும் வன்முறையான', அல்லது 'மனித மற்ற' செயலாக கருதப்படும் சந்தரர்ப்பத்தில் மாத்திரமே இந்த சம்பவத்தை குறித்து அவசர காலச் சட்டத்தின் கீழ் விசாரணை செய்யப்பட லாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இணையத் தீங்குகளைத் தடுப்பதனை இலக்காகக் கொண்ட அரசாங்கத்தின் புதிய சட்டமூலத்தில் உள்ள குற்றவியல் பிரிவுகள் கோவை (ஊ-63) தொடர்பில் மார்ச் 6ஆம் திகதி நீதி அமைச்சினைச் சேர்ந்தவர்கள் குறிப் பிட்டனர்.

சிவில் சமூகக் குழுக்களின் தொடர்ச்சியான ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்தே அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளமை குறிப் பிடத்தக்கது.



# அல்பேர்ட்டா மாநிலத்திற்கு எதிராக பூர்வீகக் குடிகள் அமைப்பு வழக்கு!

அல்பேர்ட்டா, மார்ச் 07

அல்பேர்ட்டா மாநிலத்திற்கு எதிராக அல்பேர்ட்டா வின் பூர்வீகக் குடிகள் அமைப்பு வழக்கு தாக்கல் செய் துள்ளது.

அரசமைப்பினை மீறும் வகையில் சக்தி பிறப்பாக்கி சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன என அந்த வழக் கில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலை மாறவேண்டும் என அல்பேர்ட்டாவின் பூர்வீகக் குடிகளின் தலைவர் தெரிவித்துள்ளார்.

# வரும் வரவு – செலவுத் திட்டத்தில் பாடசாலைகளின் உணவு நிகழ்ச்சி



ஒன்ராரியோ, மார்ச் 7

அடுத்து வரும் வரவு செலவுத் திட்டத்தில் பாடசாலை உணவு நிகழ்ச்சியை உள்ளடக்குவதற்கு ஆளும் லிபரல் கட்சியுடன் பேசிவருவதாக புதிய ஜனநாயகக் கட்சி தெரி வித்துள்ளது.

தேசிய நிகழ்ச்சி தொடர்பில் இரு கட்சிகளுக்கும் இடையி லான உரையாடல் ஏற்கனவே நிறைவு பெற்றுள்ளது.

2021ஆம் ஆண்டில் தற்போதைய லிபரல் கட்சி அரசாங் கத்தை அமைத்த போது, அடுத்து வரும் 5 வருடங்களில் 1 பில்லியன் டொலர்கள் பெறுமதியான உணவு நிகழ்ச்சி களை நடைமுறைப்படுத்தப் போவதாக வாக்குறுதி அளித் திருந்தது.